**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.274/2019** **Date:15.02.2023**

**(P.W– 2)**

திரு. மாரப்பகவுண்டர் த/பெ. அவிநாசி கவுண்டர்

<u>**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> :

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1. வேலுச்சாமி கோவிலில் டீ கடை தருமகருத்தாவின் அனுமதியின் பேரில் நடத்தி வந்தது சம்பந்தமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன். வேலுச்சாமி எந்த வருடம் டீ கடை போட வாடைகைக்கு வந்தார் என்றால், 1984 ஆகும். டீ கடை வைத்திருக்கும் இடத்தில் அளவு என்ன என்றால், கிழமேல் 21 அடி தென்வடல் 47 அடி ஆகும். சுற்றியுள்ள காலி இடத்தில் வேலுச்சாமி எதுவும் செய்யவில்லை மேற்கண்ட கட்டிட அளவில் மட்டும் டீ கடை வைத்துள்ளார். சுற்றியுள்ள காலி இடத்தை வேலுச்சாமி பயன்படுத்தவில்லை.

2. 1984ல் வேலுச்சாமி வாடகைக்கு வந்தபோது வாடகை எவ்வளவு என்றால், ரூ.15 ஆகும். டீ கடை சாலை மேய நான் சென்றிருந்தேன் அதன் பின்னிட்டு எதற்கும் நான் செல்லவில்லை. அவர் எவ்வளவு வாடகை கொடுக்கிறார் எவ்வளவு நிர்ணயித்துள்ளார்கள் என்பது எனக்கு தெரியாது என்றால், ரூ.15ல் ஆரம்பித்து கொஞ்சம் கொஞ்சமாக ஏற்றி ரூ.450 கொடுத்து வந்தார். அதற்கு பின்பு எவ்வளவு கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. வேலுச்சாமி பிரதிவாதி கோவிலுக்கு வாடகை கொடுக்க வேண்டியுள்ளது என்றும், அவர் கோவிலை ஏமாற்ற பார்கிறார் என்றால், சரியல்ல.

3. நான் வேலுச்சாமிக்கு வேண்டபட்டவன் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்லுகிறேன் என்றால், சரியல்ல. கடைசியாக 2022 ல் அவர் எவ்வளவு வாடகை கொடுத்தார் என்றால், எனக்கு தெரியாது. வேலுசாமி வாடகையாக எவ்வளவு கொடுத்து வந்தார் என்றும், எனக்கு தெரியாது என்றும், என் சாட்சியம் ஏற்றுக்கொள்ள முடியாது என்றால், சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.